தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-4-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் வெட்டிவேர் கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இந்தியா வெட்டிவேர் பிணையமும் இணைந்து வெட்டிவேர் கருத்தரங்கை 11-4-2016 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடத்தியது.

இக்கருத்தரங்கில் முனைவர் பால் ட்ராங், தொழில் நுட்ப இயக்குநர், உலக வெட்டிவேர் பிணையம் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். திரு. P. ஹரிதாஸ், ஒருங்கிணைப்பாளர், இந்தியா வெட்டிவேர் பிணையம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவில் திரு. C. அசோக் குமார், இந்தியா வெட்டிவேர் பிணையம், முனைவர் V. சுந்தரேசன் விஞ்ஞானி, மருந்து மற்றும் நறுமணப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், முனைவர் P. லஷ்மண பெருமாள்சாமி, பேராசிரியர், பாரதியார் பல்கலைக்கழகம், முனைவர் S. மாரியப்பன், முதல்வர், தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இவ்விழாவில், சுற்றுச்சூழல் ஆர்வலரும், சிறுதுளி நிறுவனருமான திருமதி. வனிதா மோகன் அவர்கள் கலந்து கொண்டு, மாசுபட்ட நீர் நிலைகளை மறு சீரமைப்பதற்காக வெட்டிவேர் பயன்பட வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் K. இராமசாமி அவர்கள் தனது துவக்க உரையில் வெட்டிவேரின் பல்வேறு விதமான பயன்பாடுகளை விளக்கினார். மேலும், வெட்டிவேரின் வேரிலிருந்து பெறப்படும் பல்வேறு வாசனை மூலக்கூறுகளுக்கு உலகெங்கிலும் வரவேற்பு உள்ளதால், அது குறித்த ஆராய்ச்சிகளை மேம்படுத்த வேண்டும் என்றார். உலகெங்கும் முக்கியத்துவம் வாய்ந்த இப்பயிரில் விஞ்ஞானிகள்,

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள் ஆகியோர் உழவர்களின் வாழ்வாதாரம் உயரும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

முனைவர் பால் ட்ராங், மாசுபட்ட சுற்றுச் சூழலை மட்டுப்படுத்துதலில் வெட்டிவேரின் பங்கை விளக்கினார். வெட்டிவேரில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களை விளக்கி ஆராய்ச்சியாளர்கள் இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இவ்விழாவில் உழவர்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பல்வேறு கல்வி நிறுவனங்களை சேர்ந்த விஞ்ஞானிகள், மாணவர்கள் பங்கேற்றனர். வெட்டிவேரின் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள், இரகங்கள், வாசனை எண்ணெய் பிரித்தெடுத்தல், மதிப்புக் கூட்டல், வெட்டிவேரை பயன்படுத்தி மாசுபட்ட சூழலை மறுசீரமைத்தல் ஆகிய கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன.

உழவர்கள் வெட்டிவேர் சாகுபடி, மதிப்புக் கூட்டலில் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இவ்விழாவில் முனைவர் K. இராஜாமணி, பேராசிரியர் மற்றும் தலைவர், மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் துறை அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்